# மங்களூர் சராவு சரபேஸ்வரர் ஆலயம்

## சாந்திப்பிரியா





கர்னாடகா மானிலத்தில் புகழ் பெற்ற ஆலயங்கள் பல உண்டு. முக்கியமாக மங்களூர் மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் ஆச்சரியமான பின்னணிக் கதைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் ஒன்றே சராவு சரபேஸ்வரர் ஆலயம். அந்த ஆலயம் முக்கியத்துவம் பெற்றதின் காரணம் அங்கு சிவபெருமானும்,

வினாயக பெருமானும் தனித்தனியான காரணத்தினால் எழும்பி உள்ளனர். அங்கு வினாயக பெருமான் எழுந்ததின் காரணம் பற்றி ஒரு புராணக் கதை ஸ்கந்த புராணத்தில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அதன்படி ஒரு முறை வினாயக பெருமானும் அவருடைய சகோதரரும் தேவலோகத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கையில் முருகப் பெருமான் வினாயக பெருமானிடம் அவர் தெற்குப் பகுதியில் நேத்தாவதி நதியும் பால்குனி நதியும் இணையும் இடத்தில் எழுந்தருளி பக்தர்களின் துயரைத் தீர்க்க வேண்டும் என வேண்டிக் கொள்ள வினாயக பெருமானும் அதை ஏற்று பின்னர் ஒரு காலத்தில் சரபேஸ்வரர் ஆலயத்தில் இடதுபுறம் தன் மனைவியான சித்த லஷ்மிதேவியுடன் அங்கு எழுந்தருளினாராம். வினாயக பெருமானின் ஆலயம் அங்கு எழுந்தருளியதைக் குறித்த கதை இரண்டு பிரிவானது. முதலில் வந்தது சிவபெருமான் ஆலயம். அடுத்து வந்ததே வினாயக பெருமானின் ஆலயம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் துளு என்ற தேசத்தை வீரபாகு என்ற மன்னன் ஆண்டு வந்தான். அந்த மன்னன் சிறந்த பக்திமான். பெரும் அறிவாளி, பராக்கிரமம் மிகுந்தவர். அவர் அடிக்கடி காட்டில் சென்று வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவர். அப்படி ஒரு நாள் ஒரு அடர்ந்த காட்டில் வேட்டையாடி விட்டு திரும்பியவர் கடாலி ஷேத்திரப் பகுதியை அடைந்தார். அங்கு நேத்திராவதி மற்றும் பால்குனி நதிகள் ஓடிக் கொண்டு இருந்தன. அதன் அருகில் சிவாலயமும், விஷ்ணு பெருமானின் ஆலயமும் இருந்தன. காட்டில் வேட்டையாடி விட்டுத் திரும்பியவர் தன் குடும்பத்தினருடன் இளைப்பாறிய பின் குளித்துவிட்டு அங்கிருந்த சிவாலயத்திற்குச் சென்று வழிபட்டார். திரும்பும் வழியில் அந்த ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் அடந்த காடு இருப்பதைக்

கண்டார். அங்கும் கொடிய விலங்குகள் இருக்கலாம் என நினைத்து உள்ளே சென்றார். அந்த காட்டில் பல ரிஷி முனிவர்களுடைய குடில்கள் இருந்தன. அவற்றை நோக்கியவண்ணம் நடந்தவர் கண்ணில் ஒரு அற்புதமாக காட்சி தெரிந்தது. ஒரு இடத்தில் பசு நின்றிருந்து புல் மேய்ந்து கொண்டு இருக்க அதன் பக்கத்தில் ஒரு புலி சென்று நின்றது. 'ஐயோ, புலி அந்த பசு மாட்டைக் கொன்று விடுமே' என மன்னன் பதறினான். சற்றும் தாமதிக்காமல் அந்த புலி மீது ஒரு அம்பை எய்தான். அந்தோ பரிதாபம், அந்த அம்பு பசு மாட்டின் மீது பாய்ந்து அதைக் கொன்று விட்டது. பசுவைக் கொன்று விட்டேனே எனத் துடித்து அங்கிருந்த முனிவர் ஒருவரின் குடிலுக்குச் சென்று அவரிடம் நடந்ததைக் கூறி அழுதான். அவன் சந்தித்தது பாரத்வாஜ முனிவரைதான். அவன் கூறிய அனைத்தையும் கேட்ட முனிவர் 'மன்னா நடந்தது நடந்துவிட்டது. இந்த புனிதமான இடத்தை பரசுராமர் தோற்றுவித்துள்ளார். இல்லை எனில் பசுவும், புலியும் ஒரு இடத்தில ஒன்றாக வாழ முடியுமா?. நீ பசுவைக் காப்பாற்றத்தான் அம்பு எய்தாய். உன் எண்ணத்தில் தவறு இல்லை. ஆனால் உன்னையும் மீறி நீ பாபத்தை பெற்றுக் கொண்டு விட்டாய். அதற்கு பிராயசித்தமாக உன்னால் முடிந்தால் நீ ஒரு சிவ பெருமான் கோஆலயத்தை அந்த பசு மரணம் அடைந்த இடத்தில் எழுப்பி அங்கு தினமும் சென்று பூஜைகள் செய்து வந்தால் பாபம் படிப்படியாகக் குறைந்துவிடும்' என்றார்.

அந்த மன்னன் சற்றும் யோசிக்கவில்லை. தான் சிவ பெருமானின் ஆலயம் எழுப்புவதாக உறுதி கூற அந்த முனிவர் அவனிடம் கூறினார் ' மன்னா ஆலயம் எழுப்பும் முன் அந்த இடத்தில்; ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜையைத் துவக்கு. அவர் சரபேஸ்வர் எனப் பெயர் பெறுவார். அதற்கு முன் ஆலயம் கட்ட

உள்ள இடத்தின் வடக்குப்புறத்தில் ஒரு குளத்தைக் கட்டி அதன் தெற்குப்புறம் ஒரு பசுமாட்டின் சிலையை அமைக்க வேண்டும். என் தவ வலிமையினால் அந்த பசுவின் முகத்தில் இருந்து நேத்திராவலி நதியின் நீரை அதில் பாயச் செய்கின்றேன். அந்த குளம் என்றும் வற்றாது. அந்த குளத்திற்கு சரபேஸ்வரர் குளம் எனப் பெயரிடு. ஆலயத்தைக் கட்டிய பின் ஒரு லட்சம் பண்டிதர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். காலப் போக்கில் அந்த ஆலயமும் காசி விஸ்வநாதராக போற்றப்பட, குளத்து நீர் கங்கை நதி என பெருமைப் பெறும். அது மட்டும் அல்ல ஆலயத்தின் தெற்குப்புறம் வினாயகப் பெருமான் தாமாகத் தோன்றி எழுந்தருளி அந்த ஆலயத்தை சராவு மஹா கணபதி ஆலயம் என மக்கள் ஏற்கும்வண்ணம் காலத்தை மாற்றுவார்'. முனிவர் கூறிய அறிவுறையை ஏற்று உடனே ஆலய நிர்மாணப் பணியினை மன்னன் மேற் கொண்டான். அவன் அம்பு எய்த இடத்தில் பாரத்துவாஜ முனிவர் சிவலிங்கத்தை பிரதிட்சை செய்து சரபேஸ்வரர் எனப் பெயரிட்டார். அவருடைய சக்தியினால் நேத்திரா நதியின் நீர் அந்த குளத்தில் பசுவின் முகம் வழியே வழிந்தது.

காலம் கடந்தது. வீரபாகுவிற்கு குழந்தைகள் இல்லை என்பதினால் அவரு, அவருடைய மனைவியும் தினமும் ஆலயத்திற்கு சென்று பூஜைகள், புனஸ்காரங்களை செய்து காலத்தைக் கடத்தினர். அந்த நேரத்தில் ஹோய்சலா சம்ராஜ்யத்தில் இருந்த சந்திர சேகர ஜெயின் என்ற மன்னன் இன்னொரு நகரின் மன்னனான விஷ்ணுவர்தன் என்பவர் ஜெயின் மதத்தை விட்டு விலகி விஷ்ணு பக்தனாகி விட்டான் என்ற கோபத்தில் அவர் மீது பகைமை கொண்டான். இருவருக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் சந்திர சேகர ஜெயின் மரணம் அடைந்துவிட அவனுடைய மகனான

வீரபங்கராஜா என்பவன் உயிருக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடி வீரபாகுவிடம் தஞ்சம் அடைந்தான். பாரத்துவாஜ முனிவரின் அறிவுறைப்படி அவனை தன்னுடைய பிள்ளையாக தத்து எடுத்துக் கொண்டு அவனிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு வீரபாகு வனவாசத்திற்கு போய் விட்டார்.

அவன் பதவிக்கு அமர்ந்த நேரமே அந்த நாட்டிற்கு நல்ல நேரம் என உணர்ந்த வினாயக பெருமான் தன்னுடைய தாயாரிடம் சென்று அந்த மன்னனின் கனவில் அவள் தோன்றி அவளுக்கு நேத்திரா நதிக்கரையில் கோரக்நாத் ஆசிரமத்திற்கு அருகில் ஒரு ஆலயம் அமைத்துக் கொடுக்குமாறு கூறும்படியும் அவளுடைய ஆலயம் அமைந்த அடுத்து சில காலத்தில் தானும் அவளுக்கு நேர் எதிராக எழ இருக்கும் ஆலயத்தில் குடி கொண்டு அவளை தினமும் தரிசித்துக் கொண்டு இருக்க ஆசைப்படுவதாக கூறினார். அவளும் தன்னுடைய மகனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக பங்கராஜாவின் கனவில் தோன்றி கோரக்நாத் ஆசிரமத்தின் அருகில் தான் புதைந்து கிடப்பதாகவும், நாட்டு மக்களுடைய வாழ்வில் மங்களம் தர தான் எழுந்தருள உள்ளதாகவும், ஆகவே தன்னை வெளியில் எடுத்து அங்கேயே ஒரு ஆலயம் அமைக்கும்படியும் கூறினாள். முதலில் தான் கண்டது கனவா இல்லை உண்மையில் தேவிதான் தன் கனவில் வந்து அதைக் கூறினாளா எனக் குழம்பியவன், மந்திரிகளின் ஆலோசனைப்படி கனவில் தேவி கட்டளை இட்டபடி அவள் கூறிய இடத்திற்குச் சென்று பூமியில் புதைந்திருந்த தேவியை எடுத்து ஆலயத்தை அமைத்தான். அந்த ஆலயத்திற்கு மங்களாம்பிகை எனப் பெயரிட்டான். தினமும் முறைப்படி பூஜைகளும் புனஸ்காரங்களும் மங்களாம்பிகை மற்றும் சரபேஸ்வரர் இருவருக்கும் நடந்து வந்தன. இன்னும் சில நாட்கள் கழிந்தது.

பங்கராஜாவும் இறந்து போனார். அவருடைய மகன் சந்திரசேகர பங்கராஜா என்பவர் ஆட்சியில் ஏறினார். அந்த துளு நாட்டில் கேசவா என்ற ஏழை பிராமணர் வசித்து வந்தார்.அவரிடம் சிறந்த பாண்டித்தியம் இருந்தது. வினாயக பெருமானின் பக்தர். மந்திர தந்திரக் கலைகளை நன்கு கற்றிருந்தவர். பிழைப்பிற்கு வழி தேடிக் கொண்டு இருந்தவர். அவர் செய்யும் ஹோமத்தில் பிரசாதம் படைக்கும் பொழுது வினாயக பெருமானின் தும்பிக்கையே நீண்டு வந்து பிரசாதத்தைத் தொட்டுச் செல்லும் என்ற அளவிற்குப் பெருமை பெற்றிருந்தவர். அவர் நேத்திரா நதிக் கரையில் இருந்த ஒரு வினாயக பெருமான் ஆலயத்தில் புஜாரியாக இருந்தார்.

ஒரு நாள் மன்னன் யோசனையில் இருந்தார். நாட்டின் நன்மைகளுக்கு காரியங்கள் செய்ய வேண்டும். ஆனால் அரச வருமானம் போதவில்லை. என்ன செய்வது? அப்போது அவருக்கு அங்கிருந்த கடல் பகுதியில்; ஏழு கப்பல்களில் விலை உயர்ந்த தங்கம் மற்றும் வெள்pப் பொருட்கள் போவதாக தகவல் கிடைத்தது. மன்னன் நினைத்தான் ‘அஹா .... அந்த பொருட்கள் நமக்குக் கிடைத்தால் நாடு எவ்வளவு செழிப்பாகும்?’ தன் எண்ணத்தை மற்றவர்களிடம் கூற அவர்கள் மந்திர தந்திர சக்திகளைப் பெற்ற கேசவாவின் உதவியை நாடலாம் எனக் கூற மன்னனும் அவரை அழைத்து அது குறித்துப் பேசினார். கேசவாவும் அந்த காரியத்தை செய்து தருவதாக உறுதியளித்து விட்டு வினாயக பெருமானை வேண்டிக் கொண்டு ஒரு ஹோமம் செய்து மந்திரப் பிரயோகம் செய்ய திடீர் என கடலில் பெரும் சுறாவளி தோன்ற அதில் சென்று கொண்டு இருந்த கப்பல்கள் தரையிங்கின. அந்த கப்பலில் இருந்தப் பொருட்களை மன்னனின் படையினர் கைப்பற்றினார். அதன் பின் கப்பல்களை மீண்டும்

போக விட்டனர். ஏன்ன அதிசயம். சூறாவளி நின்று விட்டது, கடல் அமைதியாகியது. கேசவா பெரும் புகழ் பெற்றார்.

அதுதான் சரியான தருமணம் என எண்ணிய வினாயக பெருமான் கேசவாவின் கனவில் தோன்றி ஒரு நாள் விடியற் காலையில் சரபேஸ்வர் சன்னதிக்கு மேல் தானும் தன்னுடைய மனைவி சித்தி லஷ்மியும் தோன்றப் போவதாகவும், தனக்கும் அவளுக்கும் மங்களாம்பினை எதிரில் சன்னதி அமைத்து வழிபடுமாறும் கூறி மறைந்தார். அது போலவே மன்னனின் கனவிலும் தோன்றி கூறினார். அவர் கூறியது போலவே ஒரு நாள் விடியற் காலை சரபேஸ்வரர் சன்னதியின் மேல் பகுதியில் வானில் அவர் சித்தி லஷ்மியுடன் சில நிமிடங்கள் தோன்றி விட்டு மறைய, அந்த அற்புதத் தோற்றத்தைக் கண்ட பலரும் வியந்தனர். ஆகவே அவருக்கும் அங்கு ஆலயம் எழுந்தது. நாடு செழிப்புற்றது. ஆலயம் பெரும் புகழ் பெறலாயிற்று.

வினாயக பெருமான் ஏன் சித்தி லஷ்மியுடன் தோன்றினர் என்பது குறித்து புராண செய்தி உள்ளதாம். வினாயக பெருமான் பல்வேறு கால கட்டத்தில் பல்வேறு நிலைகளில் ரூபம் எடுப்பார் எனவும்,இது கலி காலம் என்பதினால் மக்கள் பொருளாசைக் கொண்டு அலைவதினால் அதற்கேற்ப வளம் தரும் சித்தி லஷ்மி வினாயகராக அவர் அவதரித்துள்ளார் எனவும் கூறுகின்றனர்.

அந்த வினாய பெருமானின் சக்திக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது ஒரு நிகழ்ச்சி. திப்புசுல்தான் அந்த நாட்டின் வளத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அதன் மீது படையெடுத்து வந்து ஆலயத்தை சூறையாட நினைத்தார். தன் படையினருடன் துளு நாட்டின் அருகில் வந்தடைந்தவர் இரவு ஒரு இடத்தில் தங்கினார்.

அவருடைய படையெடுப்பைப் பற்றிக் கேள்விப்பட்ட மக்கள் பயந்து போய் வினாயக பெருமானின் ஆலயத்தில் இருந்த பூஜாரியிடம் அடைக்கலம் ஆக அவரும் அவர்களை சமாதானப்படுத்தி அனைவரையும் வினாயகரிடம் வேண்டிக் கொள்ளுமாறு கூறிய பின் தானும் மந்திரங்கள் ஓதலானார். அன்று இரவு திப்பு சுல்தானினால் தூங்க முடியவில்லை. அவர் கனவில் மீண்டும் மீண்டும் ஒரு யானை தோன்றி அவரை தூக்கித் தூக்கிப் போட்டு உதைப்பதைப் போல தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டே இருக்க தூக்கம் இன்றி அவதியுற்றார். கண்களை மூடவே முடியவில்லை. ஆகவே அவர் தன்னுடைய படை வீரனான ஒரு இந்துவிடம் அது குறித்துக் கேட்டார். அவரும் சகுனம் சரியில்லை என நினைத்ததினால், அந்த ஆலயத்தின் பூஜாரியை போய் பார்த்து அது குறித்துக் கேட்க அவர் வினாயக பெருமான் திப்புவின் படையெடுப்பினால் கோபமுற்று உள்ளார் என்பதை எடுத்துக் காட்டினார். அந்த படை வீரரும் திரும்பிப் போய் அதை திப்புவிடம் கூற அதுவரை மனதில் தொடர்ந்து பீதியுடன் இருந்த அவர் மனம் மாறியது. அந்த ஊர் மன்னனை சந்தித்து உரையாடிய பின் படையெடுப்பைக் கைவிட்டு விட்டு அந்த சரபேஸ்வரர் வினாயக பெருமான் ஆலயத்திக்கு பெருமளவு தானம் செய்வதாக வாக்குறுதிக் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்.

# Mangalore Saravu Sarabheswar temple

## Santhipriya





Karnataka, a southern state in India has many historical temples. Especially the temples in Mangalore have interesting legends behind them. One amongst them is Saravu Sarabeswar Maha Ganapathi temple. As per a story in Skanda Purana, once Lord

Muruga requested his brother Lord Vinayaga to manifest in the area where rivers Palguni and Netravathi merged to fulfill the wishes, and protect his devotees in and around the place. Respecting his brother's request, some years later Lord Vinayaga manifested with his wife Goddess Siddalakshmi in that place. Few legends connected with the temple of Maha Ganapathi and Lord Shiva is interesting to hear.

Long ago, a pious, God fearing and a warrior King Veerabagu ruled a place called Thulu (In Karnataka region). He was fond of hunting and one day as he was returning back after hunting, he stopped in a place where rivers Palguni and Nethtravali met. There were two temples, one for Lord Shiva and other for Lord Vishnu. He rested took bath in the river, worshipped the deities in those temples, rested for a while and returned back. To the east of Lord Shiva temple was a dense forest. On way through the forest, he noticed an awesome scene. In the midst of the forests were several hermits for the saints and he saw a Cow and a tiger at some distance. The tiger was moving closer to the cow, but did not even attempt to attack the Cow. However in a moment of anxiety that the tiger would kill the cow, the King shot an arrow on the tiger. Alas, the arrow missed the tiger, and hit the Cow killing it on spot. The King felt sorry for the unintentional

mistake and went to saint Bharatwaja staying in the near by hermit and narrated the accidental death of the Cow and sought his advice over the unintentional sin committed by him.

Saint Bharadwaja consoled him and said ‘O king, don’t worry, now that an unintentional sin has been committed, you have to find recourse. Lord Parasurama sanctified this place due to which even habitual enemies like a Cow and a Tiger move together without attacking each other! No doubt you killed the cow in the process of saving it, but unfortunately it has resulted in gohatya (Sin for killing a holy cow). Worry not. In order to absolve the sin I suggest that you construct a temple dedicated to Lord Shiva at the same spot where gohatya was committed and Pujas and worship to Lord Shiva be performed daily. This would expiate your sin in stages’.

Without hesitation, the King agreed to the suggestion of the saint to construct a temple. Saint further advised him ‘O king! Before you begin the construction of the temple, install a Shiva Linga on the same spot and commence worship there. Subsequently you would have to also construct a tank to the north of the temple and to its south, install a stone idol of a cow. By the power of mine, I would ensure that the water from the

Netravali River flows through the mouth of the cow, which would continue to fill the tank without allowing it to dry. Name the place Sarabeshwara. In order to earn the grace of Lord Shiva, you should feed one lakh Brahmins and in course of time the deity Sarabeshwara would become famous like Kashi Vishwanath. One day Lord Ganapathy would also manifest from the southern side of the temple who should be consecrated in a temple. The temple would earn the name 'Sri Saravu Mahaganapathy.' Veerabagu became very happy, and commenced the construction of Lord Shiva temple. Bharadwaj established a Siva ling in the spot where his arrow fell and as promised, ensured that the river flew through the mouth of the statue of the holy Cow.

Veerabagu did not have an heir to take over the Kingdom after his death. So along with his wife he continued to visit the temple, performed pujas, and prayed with great devotion. During this period Chandrasekhar Jain, the king of Hoysala, harbored hatred towards Vishnuvardhan another King in the nearby state, reason being Vishnuvardhan had deserted the Jain faith and converted himself a devotee of Lord Vishnu. In the battle that ensued, Chandrasekhar Jain was killed and his son, Vera Bangaraja, approached king Veerabahu and sought his refuge. At the instance of saint Bharadwaj, Vera Bangaraja adopted him as his

son, handed over his Kingdom to him, and thereafter renouncing his life, and went to live in a forest (Vanvas) with his wife.

With Vera Bangaraja in saddle, Lord Ganapathy thought that was appropriate time to manifest and therefore requested his Mother Mangala Devi to appear in the dream of king Vera Bangaraja and instruct him to construct a temple for her near Goraknath Ashram so that he could also manifest in the opposite side of her temple along with Siddhilakshmi gazing at her all through the time. Acceding to the request of Lord Ganapathy, Mangala Devi appeared in a dream of king Bangaraja, and told him to search and dig out her idol buried to the west of Goraknath Ashram and construct a temple at the same spot as she desires to grant prosperity to the people living in his kingdom. Though King Bangaraja was bit confused over the dream, he consulted his collogues and decided to act as advised. He along with his ministers and subjects visited the spot indicated by Mangala Devi, searched and found the buried idol, installed it in a temple constructed on the same spot and named it as Mangala Devi temple. Subsequently regular daily pujas and other rituals took place both in Sharabeshwara and Mangala Devi temples.

After the death of Vera Bangaraja, his son, Chandrasekhar Bangaraja, took over the reins. During his regime there lived a poor Brahmin by name, Keshava who was a scholar, man of wisdom, and great devotee of Lord Vinayaga. He practiced tantric rituals for earning, since he was well versed in the subject and performed the duty of a priest in Ganapathi temple on the bank of Netravathi River. So famous was Keshava that in the homa performed, Lord Vinayaga used to actually appear in person to touch the divine offerings (Prasad) with his trunk as a symbol of acceptance.

One day, sitting alone, the King wondered how to increase the revenue of his state to extend more welfare measures to the people. By then he received a message that a fleet of seven ships loaded with golden ores and valuable jewels were sailing to a far-off land through the area ruled by him. The king thought that if those valuables could be confiscated, it would help develop the state to extend more welfare measures to the people. On the advice of his ministers, he utilized the services of priest Keshava to achieve the fete. Accordingly Keshava prayed Lord Vinayaga and invoked mantras to cause a violent storm in the sea thereby compelling all the ships to toss ashore. As it happened, the King after confiscating all the valuables from the ship let the crew

proceed on their voyage. What a surprise! The storm stopped and turbulence in the sea calmed down!! Thereafter Keshava became more popular.

Lord Vinayaga, who was waiting for such an opportunity, appeared in the dream of both the King and Priest Keshava to tell them that would shortly manifest along with Siddhilakshmi on the southern wall of Sharabeshwara temple, and a temple be constructed opposite to the Mangalambika's temple and he worshipped there. Leaving the instruction Lord Ganapathy disappeared from the scene. As expected, one fine morning, to the excitement of everyone, Lord Ganapathy along with Siddhilakshmi appeared on the southern wall of Saravu Shiva temple visible to everyone which lasted for few minutes. Accordingly a temple came up for him and with passage of time it became very famous.

According to some Puranas, Lord Vinayaga assumed different forms in various yugas (Periods). The present being Kali Yuga the craze for wealth overloaded the the minds of people instead of spiritual thoughts, and therefore Lord Ganapathy manifested himself with Siddhilakshmi to bestow wealth and prosperity to the devotees.

Tippu sultan heard about the prosperity of Thulu under the rule of Bangaraja. He decided to invade Thulu with a view to looting the wealth there and therefore declared a war. Followed by a huge army, he reached the outskirts of Thulu and camped there. On hearing the news of Tippu's invasion, the agonized citizens rushed to the priest seeking his help. The priest requested them to stay calm and pray to Lord Ganapathy. Along with them he too started praying Sharavu Ganapathy seeking protection from the impending peril. That night, Tippu Sultan had a bad dream in which he saw an elephant lifted him with its trunk, and threw him to the ground several times and trampled him. Tippu Sultan could not get sleep as the same dream continued to appear throughout the night and disturbed him. He called one of the ministers from the Hindu sect and sought his advice. The Minister went to the temple and consulted the priest who revealed that Lord Ganapathy was annoyed over the evil intention of Tippu and that is why he has been haunted in the night. When the minister returned back and apprised Tippu of this, for inexplicable reasons, Tippu’s mind suddenly changed to call off the war without consulting anyone. Next day he met the King and promised to grant donation to the construction of Saravu Maha Ganapathy temple and returned back to his country.